***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.133/2017 – P.W. 4 (LW4)***

| | |
|---|---|
| *Name* | கோவிந்தராஜ் |
| *Father/Husband's Name* | நடேசன் |
| *Village* | மேலவாசல் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *62* |

*1,4 வது* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 20.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி லெட்சுமணன் என்பவரை தெரியும். வழக்கின் அசா.1 செல்வராஜ் எனக்கு மாமா உறவு முறை ஆவார். எனது மாமாவின் மகன்கள் தான் பார்த்தீபன் மற்றும் அன்பு ஆவார்கள். எதிரி ஜீவானந்தம் என்பவர் சின்னம்மா மகன் ஆவார். அவருடைய மகன் சுதன் ஆவார். எதிரி ஜீவானந்த்தின் அக்கா தான் சகுந்தலா ஆவார். மேற்படி நபர்கள் அனைவரும் என்னுடைய உறவுக்காரர்கள் ஆவார்கள்.

இருதரப்பிற்கும் இடையே வேலிப்பிரச்சனை இருந்து வந்த விபரம் எனக்கு தெரியும். அது குறித்து இரு தரப்பிற்கும் இடையே என்ன பிரச்சனை என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 12.03.2017 ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் பிரச்சனைக்குரிய இடத்தில் இருந்த மரத்தை எதிரி ஜீவானந்தம் வெட்டிக்கொண்டு இருந்தார் என்றும், அதனை அசா.1 செல்வராஜ் மற்றும் அவரது இரு மகன்களும் எதிரி ஜீவானந்திடம் நீதிமன்றத்தில் வழக்கு முடிந்த பிறகு யாருக்கு சொந்தம் என்று தெரிந்த பின்பு மரத்தை வெட்டலாம் என்று கூறியபோது எதிரி ஜீவானந்தம் கொச்சை வார்த்தையால் திட்டியும், கையில் வைத்திருந்த அரிவாளால் செல்வராஜின் இடது புறங்கையில் வெட்டினார் என்றும், அதை தடுக்க வந்த செல்வராஜ் மகன் பார்த்தீபனுக்கு வலது கை நடுவிரலிலும், அதை தடுக்க வந்த அன்பு என்பவரை இடது புற நெஞ்சிலும், இடது புற முதுகிலும் வெட்டி காயப்படுத்தினார் என்றும், பின்னர் அதனை நானும், லெட்சுமணன் என்பவரும் சமாதானம் செய்தோம் என்றும், ஜீவானந்தம் அருகில் நின்ற கல்யாண சுந்தரம் , சுதன், சகுந்தலா ஆகியோர்கள் செல்வராஜ் மற்றும் அவரது மகன்களை கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றும், எதிரி ஜீவானந்தம் மேற்படி நபர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சம்பவத்தை நேரடியாக பார்ததாக கூறிவிட்டு, தற்சமயம் இருதரப்பினர்களும் உறவினர்கள் என்ற காரணத்தாலும் இரு தரப்பினர்களிடையே எந்த பொல்லாப்பு வராமல் இருப்பதற்காகவும், உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No.133/2017 – P.W. 5 (LW7)***

| | |
|---|---|
| *Name* | சங்கர் |
| *Father/Husband's Name* | விசுவலிங்கம் |
| *Village* | மேலவாசல் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 58 |

*1,4 வது* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 20.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 செல்வராஜ் குடும்பத்தினரும், ஜீவானந்தம் குடும்பத்தினரும் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். சாட்சி கலிய பெருமாள் என்பவரை தெரியும். அவர் எனது பக்கத்து தெருக்காரர்கள் ஆவார் மற்றும் சித்தப்பா உறவு முறை ஆவார்.

தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடைய தான். மேற்படி கையொப்பத்தை கடந்த 2017 ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் இரவு சுமார் 07.30 மணியளவில் எதிரிகளுக்கும், வாதிக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக மேற்படி வாதிகளின் வீடும், எதிரிகளின் வீடும் பக்கத்து பக்கத்து இடத்தில் உள்ளது. அந்த இடத்தில் போலீசார் மாதிரி வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் யார் சாட்சி கையொப்பம் செய்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. (**பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நடேசபெருமாள், கலியபெருமாள் என்னுடைய ஊர்ககாரர் தான். கலிய பெருமாள் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று

கூறினார். நான் அரசியலில் முக்கிய பொறுப்பில் உள்ளேன். பொது பிரச்சனைகளுக்கு காவல் நிலையம் அடிக்கடி செல்வது வழக்கம் தான். மேலவாசல் கிராமத்தை பொறுத்து காவல் துறையினருக்கு ஏதாவது உதவி என்றால் என்னை கோருவார்கள். அதனால் தான் இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்க்க சொன்னேனா என்றால் இல்லை. அவர்கள் அங்கு வந்தனர். அதனால் என்னை சாட்சியாக சேர்த்துக்கொண்டனர். விசாரித்தபிறகு காவல் நிலையம் வா என்று அழைத்தார்கள். அதன் பேரில் காவல் நிலையம் சென்று பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். சாட்சி மறுபடியும் இல்லை சம்பவ இடத்தில் தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று கூறினார். காவல் துறையினருக்கு ஆதரவாகவும், அசா.1 எனக்கு உறவினர் என்பதாலும் உண்மை நிலையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.133/2017 – P.W. 6 (LW10)***

| | |
|---|---|
| *Name* | R.மனோகரன் - ஒட்டு உறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியர். தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை. |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *56* |

*1,4 வது* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 20.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் ஒட்டு உறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 12.03.2017 ம் தேதியன்று காலை 10.55 மணியளவில் செல்வராஜ் என்கிற 64 வயது மதிக்கதக்க ஆண் மன்னார்குடி அரசு மருததுவமனையில் இருந்து பரிந்துரை பெற்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவர் தன்னை காலை 08.00 மணியளவில் மேலவாசல் அருகே 4 அடையாளம் தெரிந்த நபர்கள் அரிவாளால் தாக்கியதாக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் கூறியதை மன்னார்குடி மருத்துவர் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக மேற்படி தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்துள்ளார்கள். அந்த பரிந்துரையின் அடிப்படையில் சிகிச்சைக்காக வந்த நபரினுடைய மன்னார்குடி விபத்து பதிவேடு எண்.35 உள்ள சங்கதிகளை மருத்துவர் சம்பத் என்பவர் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து உள்நோயாளிகாய அனுமதிக்கப்பட்டவரை பொது அறுவை சிகிச்சை நிபுணர்களால் சிகிச்சை

அளிக்கப்பட்டு என்னிடம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை கேட்டார்கள். மேற்படி நபருக்கு இடது கையில் 2X1X1 cm அளவில் தோலில் கிழிந்த காயம் காணப்பட்டது. மேற்படி காயத்தின் காயத்திற்கு சொற்பகாயம் என்று மருத்துவ சட்டகருத்துரை வழங்கியுள்ளேன். **செல்வராஜினுடைய விபத்து பதிவேடு எண்.2296579 அசா.ஆ-3 ஆகவும், செல்வராஜினுடைய மருத்துவ சட்ட கருத்துரை அசா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

அதே போல் அன்றையதினமே காலை 10.53 மணியளவில் பார்த்தீபன் என்கிற 31 வயது மதிக்கதக்க ஆண் மன்னார்குடி அரசு மருததுவமனையில் இருந்து பரிந்துரை பெற்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவர் தன்னை காலை 08.00 மணியளவில் மேலவாசல் அருகே 4 அடையாளம் தெரிந்த நபர்கள் அரிவாளால் தாக்கியதாக மன்னார்குடி அரசு மருத்துவமனையில் கூறியதை மன்னார்குடி மருத்துவர் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக மேற்படி தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்துள்ளார்கள். அந்த பரிந்துரையின் அடிப்படையில் சிகிச்சைக்காக வந்த நபரினுடைய மன்னார்குடி விபத்து பதிவேடு எண்.34 உள்ள சங்கதிகளை மருத்துவர் சம்பத் என்பவர் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து உள்நோயாளிகாய அனுமதிக்கப்பட்டவரை பொது அறுவை சிகிச்சை நிபுணர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டு என்னிடம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை கேட்டார்கள். மேற்படி நபருக்கு 4X2X1 cm அளவில் வலது மோதிர விரலில் கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு பரிசோதனையில் தசைநார்கள் இரண்டும் வெட்டு காயம்பட்டியிருந்தன. அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சிகிச்சைக்கு பின் கவனிப்பிற்கு பிறகு 07.04.2017 ம் தேதியன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று மருத்துவ சட்டகருத்துரை வழங்கியுள்ளேன். **பார்த்திபனுடைய விபத்து பதிவேடு எண்.0047788 அசா.ஆ-5 ஆகவும், பார்த்திபனுடைய மருத்துவ சட்ட கருத்துரை அசா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

Ring finger என்பது middle finger என்பது வேறு வேறு என்றால் சரிதான். விபத்து பதிவேட்டின் படியும், சிகிச்சை அளித்ததின் படியும் காயம்பட்ட பார்தீபனுகடு middle finger காயம் இல்லை என்றால் சரிதான். தாக்குதல் இன்றி பிற விதத்திலும்

காயம்பட்டவருக்கு இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi